

# மார்த்தாண்டத்தில் மலர் கண்காட்சி

புதுக்கடை, செப். 15-
மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் கிரீன் அக்ரி கிளப் ஆப் இந்தியா மற்றும் குழித்துறை ஜெ.சி.ஐ., சார்பில் மலர் கண்காட்சி நடந்தது.

கண்காட்சிக்கு கிரீன் அக்ரிகிளப் ஆப் இந்தியா தலைவர் ராஜ்குமார் தலைமை வகித்தார். கல்லூரி தாவரவியல் துறை தலைவர் மேபல் ஸ்டார்லின் வரவேற்றார். பிரமிளா தேவதாஸ் முன்னிலையில் பேராசிரியர் ஜெயக்குமார் மலர் கண்காட்சியை திறந்து வைத்தார்.

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி முதல்வர் விஜி நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தார்.

மினி பிரியா, வின் சென்ட் ஆகியோர் கருத்துரையாற்றினர். தோட்டக்கலை விஞ்ஞானி ரிச்சர்ட் கென்னடி மலரியல் கருத்தரங்கம் நடத்தினார்.

நிர்வாக இயக்குனர் ஜெயராஜ் நன்றி கூறினார்.